17th July 1962]

Government General Hospital, Madras

* 335 *Q*.—SRI V. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any congestion in the accommodation in the General Hospital, Madras; and

(*b*) if so, the action taken to solve the problem?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) Yes, Sir.

(*b*) There is a proposal to construct a 500-bedded block in the Government Royapettah Hospital, Madras. The question of building a General Hospital for South Madras is also under contemplation.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : ஏற்கனவே சென்னையிலே இருக்கிற மத்திய சிறைச்சாலையை ஆவடிக்கு மாற்றிவிட்டு, அந்த இடத்தை ஆஸ்பத்திரியாக மாற்றுவதாக ஆலோசனையில் இருந்தது என்ன ஆயிற்று ? அது உடனடியாகக் கவனிக்கப்பட்டு, ஜெனரல் ஆஸ்பத்திரியை விஸ்தரிக்க அரசாங்கம் முன்வருமா என்று கேட்கிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : "சென்ட்ரல் ஜெயில்" "குவெஸ்சின் " இந்தக் "குவெஸ்சினை"-ச் சார்ந்தது அல்ல. அது தனிப்பட்ட முறையிலே அரசாங்கத்தினால் கவனிக்கப்படுகிறது. இப்பொழுது "சவுத் மெட்றாஸ்" க்கு ஆஸ்பத்திரி வருவது பற்றி தான் "குவெஸ்சின்".

திரு. சா. கணேசன் : இப்பொழுது ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஆபரேஷன் செய்யவேண்டிய பல கேஸ்கள் ஏதோ குறைபாடுகள் காரணமாக 10, 20 நாட்கள் ஆபரேஷன் செய்வதில்லை என்று தள்ளி வைக்கப்பட்டு, அதனாலேயே நோயாளிகளெல்லாம் வெளியிலே சென்று ஒன்றாக இப்பொழுது வந்து குவிவதால் ஏற்படுகிற சிரமம் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : இம்மாதிரி தகவல் ஒன்றும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

Assistant Surgeons (special pay)

* 336 *Q*.—SRI A. P. DHARMALINGAM (on behalf of SRI K.A. MATHIALAGAN) : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is any proposal to give special pay for Assistant Surgeons to induce them to go to rural areas; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) & (*b*) : A special compensatory allowance of Rs. 50 per mensem is being allowed to Assistant Surgeons working in rural (non-municipal) areas. No other proposal is under Government's consideration.

தொத்து நோய் மருத்துவ மனை ஊழியர்கள் (விசேஷ ஊதியம்)

* 337 கேள்வி.—**திரு. முனு ஆதி :** கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தொற்றுநோய் மருத்துவ மனைகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கும், அதிகாரிகளுக்கும் விசேஷ அதிகப்படியான ஊதியம் தரப்படுகிறதா ?

(இ) எவ்வளவு ?

(உ) சமீப காலத்தில் அதிகப்படியான அலவன்ஸ் வேண்டும் என்று கேட்டிருந்தார்களே, கொடுக்கப்பட்டதா ?

(எ) இல்லையெனில், காரணமென்ன ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

(*c*) The request for the grant of a risk allowance to the staff of the Infectious Diseases Hospital, Madurai was not sanctioned.

(*d*) No similar allowance is paid to any of the staff in the Government Tuberculosis and Leprosy institutions nor is such an allowance paid to the staff of the Infectious Diseases Hospital in the Madras City maintained by the City Corporation. Further, the attendance at the Infectious Diseases Hospial, Madurai is less than five at any one time. The work turned out by the staff does not warrant the grant of any special allowance.

திரு. முனு ஆதி : தொத்து நோயினால் அங்கே வேலை செய்பவர்கள் அடிக்கடி பாதிக்கப்படுவது காசநோய் ஆஸ்பத்திரி குரோம்பேட்டில் இருப்பதால்தான் என்று நான் நன்கு அறிவேன். அவர்களுக்கு பிரத்தியேக அலவன்ஸ் கொடுத்து தன்னைத் தானே காப்பாற்றிக்கொள்ள வசதிசெய்து கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அப்பேர்ப்பட்ட தகவல் ஒன்றும் அரசாங்கத்திற்கு வரவில்லை. அதைப்பற்றி யோசனை செய்வதற்கு தற்பொழுது சாத்தியப்படாது.

Veterinary College for Madurai

* 338 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether there is any proposal to start a Veterinary College in Madurai district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) There is a proposal to start another Veterinary College in this State. The venue of the proposed college has not yet been decided.

(*b*) The proposals are in the initial stages. Details have not yet been settled.

திரு. வை. சங்கரன் : மதுரையில் ஒரு சர்வகலாசாலை ஆரம்பிக்கும் உத்தேசம் இருப்பதினால், அது பூர்த்தியாவதற்கு பாக்கியுள்ளவைகளில் ஒன்றாகிய இந்த கால்நடை மருத்துவக் காலேஜையும் மதுரை மாவட்டத்திலே ஆரம்பிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தக் காலேஜை எங்கே வைப்பது என்பதைப் பரிசீலனை செய்ய ஒரு கமிட்டி போட்டிருக்கிறோம். அந்தக் கமிட்டியின் ரிப்போர்ட் இன்னும் வரவில்லை. அது வந்த பிறகு ஒரு முடிவு எடுக்கப்படும்.